**O.S.No.4/2024**

வா.சா.1, திருமதி.லெட்சுமி

நாள் : 21.01.2026 நேரம் : 3.20 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1,2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)எனது தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி வாரிசுகள் தான் நான் மற்றும் 1,2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் இரண்டாம் மனைவியின் மூலம் 3 வாரிசுகள் என்றாலும் அவர்கள் பெயர் அழகர்சாமி, குணசேகரன் மற்றும் பூசம்மாள் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றதாக கூறும் இடத்தின் சர்வே எண். 312 என்றால் எனக்கு சரியாக நினைவு இல்லை. சர்வே எண். 312ன் மொத்த விஸ்தீரணமான 2 ஏக்கர் 38 சென்டில் நான் கிரையம் வாங்கியதாக கூறும் வடபுறம் 59 சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியதாக கூறும் சொத்து ராமசாமி என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2)நான் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். ராமசாமி என்பவருக்கு சண்முகம், அருணாச்சலம், பூவண் என்ற 3 வாரிசுகள் என்றால் சரிதான். ராமசாமியின் வாரிசுகளுக்குள் சர்வே எண். 312 மொத்த விஸ்தீரணமான 2 ஏக்கர் 38 சென்டை சரிசமமாக பிரித்தால் ஒருவருக்கு 79.33 சென்டு பாகம் வரும் என்றால் சரிதான். நான் அருணாச்சலம் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை, பாலு என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். நான் கிரயம் பெற்றதாக கூறும் பாலு என்பவர் அருணாச்சலம் தத்தெடுத்துள்ளார் என்றால் சரிதான். அருணாச்சலம் என்பவருக்கு 2 மனைவிகள் என்றாலும், அவரின் முதல் மனைவி மகள் பெயர் ரெங்கம்மாள் என்றாலும் ரெங்கம்மாள் மகன் தான் பாலு என்றாலும் சரிதான். பாலு என்பவர் அருணாச்சலத்திற்கு பேரன் என்றால் சரிதான். மேற்படி அருணாச்சலம் என்பவர் தனது பேரரான பாலுவிற்கு நான் கிரயம் பெற்றதாக

கூறும் சொத்தை இனாம் செட்டில் மென்ட் எழுதி கொடுத்ததன் அடிப்படையில் தான் பாலுவிற்கு பாத்தியம் என்று கிரய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3)அருணாச்சலத்திற்கு உண்மையில் சர்வே எண். 312 ல் 79.33 சென்ட் தான் பாத்தியம் இருந்தாலும் அதில் 59 சென்டை தான் பாலுவிடமிருந்து நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றாலும் சரிதான். ராமசாமி மக்கள் அருணாச்சலம், சண்முகம், பூவண் ஆகியோர்கள் சண்முகம் மகள் சுப்பம்மாளுக்கு சர்வே எண். 312 ல் உள்ள மொத்த சொத்தை கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சுப்பம்மாளுக்கு திருமணம் முடிந்து வாழ வெட்டியாக வந்ததால் மேற்படி ராமசாமியின் வாரிசுகள் கிரயம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை தற்போது நான் அனுபவம் செய்யவில்லை என்றாலும், 1,2 பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரிதான். தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதற்கு 1,2 பிரதிவாதிகள் பயிர் காப்பீடு செய்து வருகிறார்கள் என்றால் தற்போது 2 ,3 வருடங்களாக தான் தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகள் உழவடை செய்து வருகிறார்கள். அதற்கு முன்னர் 30 வருடங்களுக்கு மேல் நான் தான் உழவடை செய்தேன்.

**(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது )**

விசாரணை முடிவுற்ற நேரம்: 3.40PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.01.21 10:32:44 +0530